www.tamilarangam.net

# STUDENTS HUNGER STRIKE IN TAMIL EELAM!



More than 40,000 students from Tamil Eelam's Schools staged a one-day hunger strike at several venues on 10th October 1984 to protest against the continuing harassment of students by the Armed Forces and the transformation of Schools into Army-detention camps, and the burning of the Hartley College Library and other buildings.

## தமிழீழ மாணவர் பேரவைச் சின்னத்திற்கான விளக்கம்

- தென்றற்கவி

**மகரயாழ்** ★ பண்டைய ஈழத்து வேந்தன் இராவணன் கொடியில் இடம் பெற்ற சிறப்பைப் பெற்றது ''**யாழ்**''ச் சின்னம்.

★ '**யாழ்பாணத்துடன்**' வரலாற்று ரீதியில் தொடர்புடையது யாழ்.

★ தமிழ்த் துறவி விபுலானந்த அடிகளார் பண்டைத் தமிழர்தம் வழக்கிலிருந்து அழிந்துபோன 'யாழ்' வகைகளைப் பழம் பெரும் இலக்கியங்கள் துணைக்கொண்டு திரும்பவும் ஆக்கித் தமிழிசைக்குப் புத்துயிரளித்து '**யாழ் நூல்**' எனப்படும் அரிய ஆராய்ச்சி நூலையும் வழங்கியவர்.

★ மகரயாழில் காணப்படும் **மகரம்** (மீன்), சங்கம் அமைத்துத் தமிழ்வளர்த்த பாண்டியர்களின் சின்னம்—ஆகவே தமிழரின் சின்னம்.

★ தமிழகத்திற்குப் புகழ் சேர்க்கும் இயற்கை எழில் கொண்ட **புலிட்டுநகர்** (மட்டக்களப்பு) மீன் பாடும் தேன்நாடு எனும் சிறப்பைத் தன்னகத்தே கொண்டது. ஆகவே தமிழீழத்தவரின் கலை, பண்பாட்டுடன் ஒன்றி இணைந்திருப்பது மகரமும் யாழும்.

**மரக்கன்று** ★ வளர்ந்து வரும் இளந்தளிர் மாணவர் சமுதாயத்தைக் குறிப்பது. இந்த இளந்தளிர்தான் வளர்ந்து பெரிய மரமாகி மலரவிருக்கும் தமிழீழத்தின் மாபெரும் சக்தியாக விளங்கும்.

★ மரத்தின் வேர் மலையகத்திலிருந்து புறப்படுகிறது. இது தேயிலைச் செடியுடன் தொடர்புடைய **மலையகத் தமிழ்த்** தோழர்களைக் குறிக்கிறது. இதுமலரும் **சமதரும தமிழீழந்தில்** மலையகத்தமிழரது அங்கத்துவத்தைக் குறிப்பதுடன், பாதுகாப்புக் கருதி பாதிக்கப்பட்ட மலையகத் தமிழரைத் தமிழீழத்தை நோக்கி இடம் பெயரும் படியும் அறிவுறுத்துகின்றது.

**ஒளிவிளக்கு** ★ மாணவர்தம் அறிவுச்சுடரைக் குறிக்கிறது.

★ தரங்கம் பாடிக் கரையும் (''அலைகடலோரம் நித்திலங் கொழிக்கும் கோணமாமலை'' எனத் தேவாரத்தில் சிறப்பித்துப் பாடப்பெற்றது) ஒளியுமிழும் கலங்கரை விளக்கமுங் கொண்டு – இயற்கைத் துறைமுகத்தையும், தொல்பெருமைபெற்ற திருக்கோணேசுவரத் திருத்தலத்தையும் தன்னகத்தே கொண்ட **திரிகோணமாமலையே** தமிழீழத்தின் தன்னிகரிலாத் தலைநகராய் ஒளிவிடும் என்பதையும் அறிவுறுத்துகின்றது.

மொத்தத்தில் — முற்றுமுழுதும் தமிழர்களுக்கே சொந்தமான பாரம்பரியத் தமிழ்நிலம்- (இலெமூரியாக் கண்டம் என்றழைக்கப்படும் குமரிக்கண்டம் கடற்கோளினால் மூழ்கடிக்கப்பட்டபோது எஞ்சிய நிலப்பரப்பு)– தற்போதைய இலங்கைத்தீவு - எமது பெருந்தன்மைக் குணத்தினாலும், ஏமாறுந் தன்மையினாலும் சிங்கள இனத்தினரால்பெரும்பகுதி ஆக்கிரமிக்கப்பட்டநிலையில் எந்த அளவுக்குக் குறுகித் தற்போதைய தமிழீழமாகத் தேய்ந்துள்ளது என்பதையும் எமதுசின்னத்தில் காட்டப்பட்ட ''**தமிழீழ**'' வரைபடம் காட்டுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதைக்காணும் ஒவ்வொரு தமிழ்மகனும் - முக்கிய மாக எதிர்காலத் தமிழீழத்தின் சிற்பிகளாம்; மாணவர் சமுதாயமும் வீறு கொண்டெழ வேண்டாமா? வந்தேறு குடிகளிடம் நாம் இழந்த - ''ஈழத் தமிழர் இறை மையை'' மீளப்பெறத் தனது பங்கைச் செலுத்த வேண் டாமா? மானுட இனத்தின் மூலவனாயிருந்து - இயற்கை யையே இறையாகக் கொண்டு பண்பட்டு - இவ்வுல குக்கே பண்பாட்டைப் போதித்து - உலகெங்கணும் தன் கொடியை நாட்டி - இன்று தனக்கென்று சொல்வதற்கு ஒரு நாடினின்றி – நாதியின்றி – நலிவுற்றிருக்கும் தமிழ் மகன் - ''தமிழீழம் நமதே''யென்று இறும்பூதெய்தித் தலைநிமிர்ந்து பாடும் நன்னாள் வராதா? அதற்குக் கால்கோளாய் மாணவர்களாகிய எமது பங்கு என்ன?

**ஓரணியில் ஒன்று திரள்வோம் !**

**ஒற்றுமையாய் நாம் இருப்போம்!!**

**ஒருமித்தே குரல் கொடுப்போம் !!!**

**புரட்சிக்கு வித்திட்டுப் புத்துலகைச் சமைத்திடுவோம்!**

**திரண்டிடும் படைக்கூட்டித் தமிழீழம் கண்டிடுவோம்!**

**ஓங்கட்டும் புரட்சி ஒலிக்கட்டும் தமிழ் முரசம்!**



# தமிழ் ஈழ மாணவர் பேரவை

குறிக்கோள்கள்

(1) இலங்கையிலிருந்து வந்து இந்தியாவில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்களின் பாதுகாப்பு முதலியவற்றைக் கவனித்தல்.

(2) இம் மாணவர்களுக்குத் தேவையான வாசகால வசதிகள் (VISA), கல்லூரி மற்றும் கல்வி நிறுவனங் களில் இட ஒதுக்கீடு போன்றவற்றைப் பெற்றுக் கொள்ள உதவுதல்.

(3) இலங்கையிலிருந்து வந்துள்ள அனைத்துத் தமிழ் மாணவர்களையும் ''தமிழீழ மாணவர்கள்'' என்னும் தொடரில் அடக்கி அவர்களை ஒன்றிணைத்து அவர் களின் பிரதிநிதியாகச் செயற்படல்.

(4) மாணவ உறுப்பினர்களிடையே ஓய்வுநேரப் பொழுது போக்குத் திட்டங்கள், நலன்புரி வேலைகளை அறி முகப்படுத்தி அவர்கட்கு உதவுதல்.

(5) உறுப்பினர்களுக்காகக் கல்விச்சுற்றுலாக்கள், கலாசார நிகழ்ச்சிகள், படக்காட்சிகள், கருத்துரைகள் போன்ற வற்றை ஒழுங்கு செய்து கல்வியை வளர்க்கத் தேவை யான வழிவகைகளைக் கையாளுதல்.

(6) உறுப்பினர்களிடையே ஒருவருக்கொருவர் — நல் லெண்ணம் வளர்ந்துப் புரிந்து கொள்ளும் தன்மையை வளர்க்க ஏற்பாடு செய்தல்.

(7) தமிழகம் உட்பட அனைத்து நாட்டு மாணவர் களிடையே நட்புறவை ஏற்படுத்தி அனைத்து மாண வர்களதும் நியாயமான பிரச்சினைகளுக்குக் குரல் கொடுத்தல்.

Issued by the Tamil Eelam Students Organization (TESO) UK Branch

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்